## சென்னையில் இன்றும், நாளையும்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையுரை ஆற்றுகிறார்!

**சென்னை, ஜூன் 27 – சாகித்திய அகாதெமி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் – சிறப்புநிலைத் தமிழ்த்துறை இணைந்து நடத்தும் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கம்" சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 27.06.2025 மற்றும் 28.06.2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது தொடக்க விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றவுள்ளார்.**

தமிழ் மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது 20-ஆம் வயது முதல் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் தன் வாழ்நாள் முழுவதும் எழுத்தாகவும், பேச்சாகவும் மூச்சாகவும் வாழ்ந்து, 80 ஆண்டுகாலம் பொது வாழ்வு, ஐந்துமுறை முதலமைச்சராக ஆட்சிபுரிந்தது மட்டுமல்லாமல், 75 திரைப்படங்களுக்கு கதை திரைக்கதை வசனங்களையும் 15 புதினங்களையும் 20 நாடகங்களையும் 15 சிறுகதைகளையும் 210 கவிதைகளையும் படைத்துள்ளார்கள்.

மேலும், "நண்பனுக்கு", "உடன்பிறப்பே" எனும் தலைப்புகளில் 7000-க்கும் மேற்பட்ட கடிதங்களும் "கரிகாலன்" என்னும் பெயரில் கேள்வி பதிலும் எழுதியிருக்கிறார். இதைத் தவிர தாம் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்களை எழுதியிருக்கிறார். இவரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கின்றன. இவற்றின் பக்கங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஏறத்தாழ 7 இலட்சம் பக்கங்களுக்கு மேல் இருக்கும். பள்ளிப் பருவம் தொடங்கி அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டும், சமுதாயத் தொண்டும் பாராட்டுக்குரியவை. கவித்துவமும் இலக்கியத் திறனும் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்பாற்றலைப் போற்றும் வண்ணம் சாகித்திய அகாதெமி மற்றும் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம் - சிறப்புநிலைத் தமிழ்த்துறை இணைந்து முதன்முறையாக "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கம்", 27.06.2025 மற்றும் 28.06.2025 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடத்தவுள்ளது. தொடக்க விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த சிறப்பு மலரை வெளியிட்டு தலைமையுரை நிகழ்த்த உள்ளார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கத்தின் தொடக்க விழாவில், சாகித்திய அகாதெமி செயலர் முனைவர் கே. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் வரவேற்புரையும் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் மற்றும் கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் சிறப்புரையும் ஆற்றவுள்ளனர்.

தொடக்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து, கலைவாணர் அரங்கம் மூன்றாம் தளத்தில் உள்ள சிற்றரங்கில் "கவிதை" என்கிற அமர்வு 1-இல் "தனித்து ஒளிரும் நட்சத்திரம்" என்ற தலைப்பில் கவிஞர் இமையம் அவர்களும், "கவிதையியல் நோக்கில் கலைஞரின் கவிதைகள்" என்ற தலைப்பில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களும், "கலைஞரின் கவிதைகள்: அரசியலும் அழகியலும்" என்ற தலைப்பில் திருமதி முபீன் சாதிகா அவர்களும், "புனைகதை" என்கிற அமர்வு 2-இல் கருத்தாடலியல் நோக்கில் "பொன்னர் சங்கர் புதினம்" என்ற தலைப்பில் திரு. ந.நடராசப்பிள்ளை அவர்களும், "கலைஞரின் சிறுகதைகளில் சமூகச் சமத்துவம்" என்ற தலைப்பில் திரு. பாரதிபாலன் அவர்களும், "ரோமாபுரிப் பாண்டியன்வழி வணிக உறவை எழுதுதல்" என்ற தலைப்பில் திரு.மு.ரமேஷ் அவர்களும் "செவ்வியல்" என்கிற அமர்வு 3-இல் "கலைஞர் திருக்குறளுரையின் சிறப்பியல்பும் நடைமுறைப் பாங்கும்" என்ற தலைப்பில் திரு. மறைமலை இலக்குவனார் அவர்களும், "சிலப்பதிகாரம்: கலைஞரின் பங்களிப்பு" என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்களும், "தொல்காப்பியப் பூங்கா: ஒரு கதை கூறல் உரை" என்ற தலைப்பில் திரு. ரா. செயராமன் அவர்களும், "கலைஞரின் சங்கத் தமிழ்: கவிதைக் கட்டமைப்பு" என்ற தலைப்பில் திரு. தி. மோகன்ராஜ் அவர்களும் கட்டுரை வாசிக்கவுள்ளனர்.

இதேபோன்று, 28.06.2025 (சனிக்கிழமை) இரண்டாம் நாள் நிகழ்வில் "நாடகம்" என்கிற அமர்வு 4இல் "கலைஞரின் நாடகங்கள் சித்திரிக்கும் திராவிட இயக்கக் கருத்தியல்" என்ற தலைப்பில் திரு. ந. முருகேச பாண்டியன் அவர்களும், "பாமரர்க்கும் தமிழின் ருசியைக் கடத்திய மு.க.வின் நாடகங்கள்" என்ற தலைப்பில் திரு. ரவிசுப்பிரமணியன் அவர்களும், "எதிர் அடையாள அரசியலை நிகழ்த்தும் கலைஞரின் நாடகங்கள்" என்ற தலைப்பில் திரு.எல். ராம்ராஜ் அவர்களும், "திரைவசனம்" என்கிற அமர்வு 5-இல் "கலைஞரின் திரைமொழி: ராஜா ராணியில் இலக்கிய மாட்சி" என்ற தலைப்பில் திரு. இரா. சுப்பிரமணி அவர்களும், "கலைஞரின் நாடக - திரைமொழி" என்ற தலைப்பில் திரு. நா. சந்திரசேகரன் அவர்களும், "உரைநடை" என்கிற அமர்வு 6-இல் "கவிதைப் பண்புகளால் கட்டமைந்த கலைஞர் கடிதங்கள்" என்ற தலைப்பில் திரு. எல். இராமமூர்த்தி அவர்களும், "அரசியல் வரலாறான தன்வரலாறு" என்ற தலைப்பில் திரு.பழ. அதியமான் அவர்களும், "இளைஞரும் கலைஞரும்" என்ற தலைப்பில் திரு. தே. சங்கர சரவணன் அவர்களும் கருத்தரங்கில் கட்டுரை வாசிக்கவுள்ளனர்.

நிறைவு விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையுரையும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் நிறைவுரையும் சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக்குழு ஒருங்கிணைப்பாளர் இரா.தாமோதரன் நன்றியுரையும் ஆற்றவுள்ளார்கள்.

---

### சேலம் மாநகராட்சி

## அஸ்தம்பட்டியில் வளர்ச்சிப் பணிகள்!

### அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் அடிக்கல் நாட்டினார்!

*சேலம், ஜூன் 27 -* சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்தில் வளர்ச்சி பணிகள் ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் மூன்று பாலம் கட்டுவதற்கும், மாநகராட்சி நான்கு மண்டலங்கள் உட்பட்ட பகுதியில் ரூ.523 இலட்சம் மதிப்பீட்டில் 79 தார்சாலை பணிககளை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், அடிக்கல் நாட்டி பணிகளை நேற்று முன்தினம் (25.06.2025) தொடங்கி வைத்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாநகராட்சி பகுதியில் புதிய வளர்ச்சி பணிகளை தொடங்கி வைத்து தெரிவித்ததாவது:

அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.5ல் ஏ.டி.சி நகர் பகுதியில் வரட்டாற்றின் குறுக்கே உள்ள தரைமட்ட பாலத்தினை உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கு ரூ.205 இலட்சம் மதிப்பீட்டிலும், கோட்டம் எண்.15க்குட்பட்ட பகுதியில் அருண் நகர், லட்சுமி சுந்தர் நகர், வரட்டாற்றின் குறுக்கேயும், கே.எம்.எஸ் கார்டன் பகுதியில் வரட்டாற்றின் குறுக்கே ரூ.180 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன மானிய நிதி மற்றும் பொது நிதியில் இருந்து கட்டப்பட உள்ளது. பாலம் கட்டுவதற்கான பணிகள் அன்று 25.06.2025 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், மாநகராட்சி நான்கு மண்டலங்களிலும் பழுதடைந்த தார்சாலைகளை புது ப்பிக்கும் பணிகளுக்காக தமிழ்நாடு அரசால் 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.523 இலட்சம் மதிப்பீட்டில் 79 சாலை பணிகளுக்கும், கோட்டம் எண்.6ல் உள்ள இந்திரா நகரில் பூமிபூஜை செய்து தொடங்கி வைக்கப்பட்டது.

இப்பணிகளை தரமானதாகவும், விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று மாநகராட்சி ஆணையாளர் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆ.இராம ச்சந்திரன், ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன், மண்டலக்குழுத்தலைவர் திருமதி. செ. உமாராணி மாநகர பொறியாளர் ஆர்.செல்வ நாயகம், செயற்பொறியாளர் ஆர்.செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.த. தனலட்சுமி மற்றும் பலர் உடனிருந்தனர்.

---

### சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகளில்

## பி.எல்.ஏ.-2 பி.எல்.டி. வாக்குச்சாவடி முகவர்களுக்கான சிறப்பு முகாம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!



*சிவகங்கை. ஜூன் 27 -* சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது

கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் ஜூன் 1ஆம் தேதி பொதுக் குழுவில் அறிவித்தபடி ஓரணியில் தமிழ்நாடு என்ற உன்னத திட்டத்தின் கீழ் கழக உறுப்பினர்கள் இணையதளசெயலி மூலம் உறுப்பினர் சேர்க்கை இணைந்திடும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதியில் கீழ்க் கண்டவாறு நாளை (28ம்தேதி)வாக்குச்சாவடி முகவர்கள் பிஎல்ஏ2, பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் பிஎல்டி , முகவர்களுக்கான சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது . இந்த முகாமில் வாக்குச்சாவடி முகவர்கள்பிஎல்ஏ2 , டிஜிட்டல் ஏஜெண்ட் பிஎல்டி 2 ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முகாம் நடைபெறும் இடங்கள். 1. காரைக்குடி நேரம் காலை 10 மணி. இடம். அபூர்வ மஹால் .காரைக் குடி சட்ட மன்ற தொகுதி. பகல் 12 மணி. 2=திருப்பத்தூர். ஆர்.கே மஹால். திருப்பத்தூர் சட்ட மன்றத் தொகுதி. 3.சிவ கங்கை.பிற்பகல் 3 மணி ராயல் மஹால் . சிவகங்கை சட்டமன்றத் தொகுதி . 4. மானாமதுரை. மாலை 5 மணி.எம்.. எஸ் .பி.ஏ உண்ணாமலை மஹால் மானாமதுரை சட்டமன்ற தொகுதி.

இந்த தொகுதி அளவிலான கூட்டத்தில் மாவட்டகழகநிர்வாகிகள், சார்புஅணி நிர்வாகிகள், மாநில பொறுப்பாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர ,பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ,பிஎல்ஏ2, பி.எல்டி.ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர்கே ஆர் .பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

---


### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

### ஜூன் 27 (1962)



திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்" என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்

### ஜூன் 27 (2020)



தனது இளமைப் பருவத்திலேயே தீவிர கழகப் பணியாற்றத் தொடங்கி 1961ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற மாவட்ட தி.மா.மு.க. மாநாட்டுப் பொருளாளராகவும், 1965ல் நெல்லை மாவட்டம், அய்யாபுரம் கிளைச் செயலாளராகவும், தலைமை இலக்கிய அணித் தலைவராகவும், கழக வெளியீட்டுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கவித்திறன், உரைநடை வீச்சு, சிறுகதைச் சிறப்பு, நாடக ஊடகம், இலக்கிய ஆய்வு, அரங்கங்களை ஆட்கொள்ளும் சொற்பொழிவு அத்துணையிலும் முத்திரை பதித்த இவர், பாவேந்தர் பாரதிதாசன் திருக்கரத்தால் 'பகுத்தறிவுப் பாவலர்' எனும் பட்டம் பெற்றவர்.

"கழக வளர்ச்சிப் பணிகளில் இளமைக் காலம் தொட்டு ஈடுபாடு கொண்டு தொடர்ந்து தொண்டாற்றி வருபவர். அவரது எழுத்தாற்றல், இலக்கிய ஆய்வுத் திறன், கவித்திறன் முதலிய பல்வேறு திறன்களும், கழக வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் இளைஞர் சமுதாயத்திற்குத் திசைகாட்டும் '' என்று பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2005ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் சார்பில் 'பாவேந்தர் விருதினை' வழங்கி சிறப்பித்தார்.

7வது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இவர், தமிழக அரசின் சார்பில் 'பாவேந்தர் பாரதிதாசன்' நூற்றாண்டு பாவேந்தர் விருது கலைஞர் கரத்தால் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.